பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 23 | செவ்வாய்க்கிழமை | 07.01.2025 | அதிர்வு 158

## புதிய அரசமைப்பு உடனடித் தேவை

### பேராயர் வலியுறுத்து



புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் அரசு தாமதமின்றி ஈடு

05



# குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாட்டம்

### நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன் என்று அநுர அரசிடம் பொன்சேகா கேள்விக்கணை

"கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசு நடவடிக்கை எடுக்கத்தயங்குவது ஏன்.?"

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

05

## குற்றவாளிகள் எவரையும் இந்த அரசு பாதுகாக்காது!

### அவர்கள் தப்பியோடவும் முடியாது என்று நீதி அமைச்சர் தெரிவிப்பு



"சட்டம் தன் கடமையைச் செய்யும். குற்றவாளிகள் எவரையும் இந்த அரசு பாதுகாக்காது. அவர்கள் தப்பித்து ஓடவும் முடியாது."

– இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

"கடந்த ஆட்சியில்

05

## இன்று கூடும் நாடாளுமன்றம்



2025 ஆம் ஆண்டுக்கான முதல் வார நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் நிலையில், முக்கிய

05




வாய்ச் சவடாலில் அரசியல்வாதிகளுக்கு நிகர் யாரும் இருக்க முடியாது.

நீண்ட காலமாக இழுபடும் உள்ளூராட்சித் தேர்தல்கள், தமிழ் – சிங்களப் புது வருடத்திற்கு முன்னர் நடத்தி முடிக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அரசு வாக்குறுதி கொடுத்திருக்கின்றது. ஆனால் அந்தக் காலக்கெடு சாத்தியமாகும் என்ற நம்பிக்கை குறைந்து வருகின்றது.

பிறந்த புதுவருடத்தின் பின்னர் நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக 2023ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் இன்னும் நிலுவையில் உள்ள நிலையில், அந்த வேட்பு மனுக் களை ரத்துச் செய்து, புதிய வேட்பு மனுக் களை ஏற்றுத் தேர்தலை நடத்துவதற்கு வழி செய்யும் புதிய சட்டமூலம் இதுவரையில் வர்த்தமானியில் அறிவிக்கப்படவில்லை. இந்த சட்டமூல வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பில் பிரஜைகள் யாரேனும்

05









# யோகேந்திரநாதனுக்குக் கிளிநொச்சியில் அஞ்சலி!

ஈழத்தின் மூத்த படைப்பாளி நாட்டுப் பற்றாளர் நா.யோகேந்திரநாதனின் மறைவையொட்டிய நினைவேந்தல் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

ஈழத்தின் இலக்கிய, நாடக, திரைப்பட மற்றும் வானொலித் துறைசார்ந்த பன்முக ஆளுமையாளரான நா.யோகேந்திரநாதனின் கலைப்பணிகளின் கனதியை மதிப்பளித்து, அவரது நினைவுகளை மீட்டும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த அஞ்சலி நிகழ்வில், நா.யோகேந்திரநாதனின் குடும்பத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் ஈழத்தின் இலக்கியப் படைப்பாளர்கள், கலைஞர்கள், பாடசாலை அதிபர்கள், ஊடகவியலாளர்கள், தமிழ்த்தேசிய ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.








## வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில்

# யாழ்ப்பாணம் - சுகாதார நகர திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான கலந்தாய்வு

"யாழ்ப்பாணம் – சுகாதார நகர திட்டத்தின்" முன்னேற்றம் தொடர்பான கலந்தாய்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது உலக சுகாதார நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட விடயப் பரப்புக்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களின் பாவனையை மட்டுப்படுத்துவதன் தேவைப்பாடு பற்றி ஆராயப்பட்டதுடன் யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள சில வீதிகளை ஒருவழிப் பாதையாக்குவதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.



இது தொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர் ஊடாக குழு அமைத்து இறுதித் தீர்மானம் மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

மேலும் யாழ். நகர மத்தியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தின் ஊடாக எழுந்துள்ள நெருக்கடிகள் தொடர்பில் பல தரப்புக்களும் சுட்டிக்காட்டினர்.

பஸ் தரிப்பிடத்தை இடமாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது என்பதைக் குறிப்பிட்ட ஆளுநர் இது தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையினருடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

திண்மகக் கழிவகற்றல் முக்கிய சவாலாக இருக்கின்றமை தொடர்பிலும் ஆராயப்பட்டது. எரியூட்டி அமைப்பது தொடர்பில் திட்டம் முன்மொழியப்பட்டாலும் அதற்கான நிதி மூலம் மற்றும் பொருத்தமான இடத்தைக் கண்டறிவது தொடர்பில் தொடர்ந்தும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடுமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

யாழ். நகரப் பகுதியிலுள்ள பூங்காக்களை மேம்படுத்துவது மற்றும் நீச்சல் தடாகத்துக்கு பொருத்தமான இடத்தைக் கண்டறிவது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு அடுத்த மாதம் மீண்டும் கலந்துரையாடல் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.





# தங்கம்மா நூற்றாண்டு தமிழ்சைவ விழாவாகும்!

தங்கம்மா எங்களம்மா சமயவழி நின்றவம்மா
பொங்கிவரும் ஆசைகளை பொசுக்கிட்டார் எங்களம்மா
திங்களணி எம்பிரானைத் தினமெண்ணும் தங்கம்மா
மங்கலமாம் சுடராக வலம்வந்தார் மாநிலத்தில்!

இல்லறத்தில் இணையாமல் நல்லறத்தில் இணைந்தாரே
உள்ளமதில் உறுபொருளை ஊன்றியே விதைத்தாரே
ஊர்சிறக்க வாழ்நாளை உவந்தளித்தார் அம்மாவும்
பார்முழுக்க அவர்நாமம் பரவியே நிற்கிறதே!

ஆசானாய் கால்பதித்து ஆன்மீகம் தேர்ந்தெடுத்தார்
ஆசையுடன் அரனடியை அவரகமும் பற்றியதே
மாசுமறு வணுகாமல் வழிகண்டார் அம்மாவும்
காசினியில் யாவருமே கைகூப்ப வாழ்ந்தாரே!

சைவத்தைத் தத்துவத்தை தான்சொத்தாய் ஆக்கினரே
மெய்யான பரம்பொருளை விலகிவிடா திருந்தனரே
அரனடியார் பாதையிலே அவர்செல்ல விரும்பினரே
அதனாலே அவர்பாதை அனைவரகம் அமர்ந்ததுவே!

நாயன்மார் சிந்தனையில் நல்லதமிழ் தேர்ந்தெடுத்து
சங்கத் தமிழோடு சந்தத் தமிழுரைத்தார்
பக்தியொடு பக்குவத்தைப் பாங்காக எடுத்துரைக்க
எங்களம்மா தங்கம்மா ஏகிநின்றார் பலவிடங்கள்

நல்லைநகர் நாவலரை நாம்மறக்க மாட்டோமே
அவ்வழியில் செல்லவல்லார் யார்வருவார் எனநினைத்தோம்
எங்களம்மா தங்கம்மா வந்தமைந்தார் அந்நிலையில்
அந்தத் திருமகளை அகமிருத்திப் போற்றுவமே!

சைவத்தைத் தமிழைக் காக்கவந்த காவலனாய்
நல்லைநகர் பெருமானும் நம்நாட்டில் பிறந்தனரே
அவர்பிறந்து பலகாலம் ஆனததன் பின்னாலே
அவர்பணியைத் தொடர்வதற்கு பிறந்திட்டார் அம்மாவும்

ஆலயத்தைத் தேர்தெடுத்து ஆற்றினார் சொற்பெருக்கை
அகமிருக்கும் அழுக்குகளை அகற்றிவிடக் கருத்துரைத்தார்
அம்மாவின் சொற்பெருக்கை அடியார்கள் பருகிநின்றார்
ஆலயத்தை வாழ்வாக்கி அம்மாவும் அமைந்துநின்றார்

தெல்லிநகர் பதியையே தேர்ந்தெடுத்தார் எங்களம்மா
நல்லிதயம் மலர்ந்ததனால் நற்பணிகள் பலதொடர்ந்தார்
அல்லல்படும் மக்களை அடையாளம் அவர்கண்டார்
அரவணைத்து கைகொடுத்து அவர்வாழ வழிவகுத்தார்

துர்க்கையம்மன் சன்னதியைத் துயர்துடைக்கும் இடமாக்கி
சாந்தி நிலையமாய் வளர்த்துநின்றார் எங்களம்மா
தங்கம்மா எனும்நாமம் சஞ்சலத்தைப் போக்குதற்கு
தக்கதொரு மருந்தாக அமைந்துமே இருந்ததுவே!

ஆன்மீகம் என்பதற்கு அவர்விளக்கம் கண்டார்கள்
அல்லலைப் போக்குவதை அகமிருத்தி நின்றார்கள்
ஆணவத்தை வெறுத்தார்கள் அன்புநிலை அணைத்தார்கள்
ஆர்மனமும் நோகாமல் அவருரைத்தார் நன்மொழிகள்

பல்கலைக் கழகத்தார் வழங்கிநின்றார் பட்டத்தை
பலசபைகள் பல்லமைப்பும் வழங்கினார் பட்டமெலாம்
என்றாலும் அவர்பெயரில் இணைந்த ஒருபட்டமாய்
சிவத்தமிழ் செல்வியே தெரிகிறது ஒளியாக!

தங்கம்மா நூற்றாண்டு தமிழ்சைவ விழாவாகும்
எங்களின் பொக்கிஷமாய் இருந்தாரே தங்கம்மா
சங்கத்தமிழ் சமயத்தமிழ் எங்கணுமே கொடுத்தாரே
எங்களது தங்கம்மா என்றுமே வாழ்கிறார்!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அதன் பின்பு அப்படித் தாக்கல் செய்யப்படும் ஆட்சேபனைகள் தொடர்பில் நீதிமன்றம் விசாரணை நடத்தி உரிய பரிந்துரைகளைத் தருவதற்கு மூன்று வார கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

அப்படிப் பார்த்தால், அந்தப் பணிக்கு மாத்திரம் ஏறத்தாழ ஒன்றரை மாதங்கள் தேவைப்படும். இன்னமும் அந்த சட்ட வரைவு நாடாளுமன்றத்துக்கோ வர்த்தமானிக்கோ வரவில்லை. இன்று ஆரம்பமாகும் புதிய கூட்டத் தொடரில் அது வருவதான சாத்தியக் கூறுகளும் தென்படவில்லை.

குறைந்தபட்சம் இந்த மாதம் மூன்றாம் வாரத்தில், அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்காவது அது வந்தாலும், அதன் பின்னர் இந்த விடயங்களைத் தாண்டி, அச்சட்டமூலத்தை நிறைவேற்றி, சட்டமாக்கி, அதன் கீழ் புதிய தேர்தலுக்கான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டு, அதன் பிரகாரம் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தேர்தல் பிரசாரத்துக்கு உரிய கால அவகாசத்தை வழங்கி, தேர்தல்களைச் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் நடத்தி முடிப்பது மிக நெருக்கடியானதாகவே இருக்கும். காலக்கெடு அதற்கு போதுமானதாக இருக்காது.

ஆக, போகின்ற போக்கில் பார்த்தால் உள்ளூராட்சித் தேர்தலை சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் நடத்தி முடிப்பது என்பது சாத்தியப்படக்கூடிய விடயமாகத் தெரியவில்லை.

\+ + +

இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைமை பதவியில் இருந்து மாவை சேனாதிராஜாவை இறக்குவதற்கு எதிராக யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

எனினும் மாவை சேனாதிராஜாவை அந்தப் பதவியிலிருந்து இறக்குவது தொடர்பாகத் தீர்மானிப்பதற்காக கடந்த 28ஆம் திகதி கூட்டப்பட்ட கட்சியின் மத்திய குழு திட்டமிட்டபடி கூடி மாவை சேனாதிராஜாவை அந்தப் பதவியில் இருந்து இறக்கி, பதில் தலைவராக சி.வி.கே.சிவஞானத்தை தெரிவு செய்துவிட்டது.

இதன் பின்னர் இந்த விவகாரத்தை ஒட்டி மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை எதையும் ஆரம்பக் கட்டமாக விதிப்பதற்கான வாய்ப்புகள் பெரும்பாலும் அருகி விட்டன. இன்று இந்த வழக்கில் என்ன நடைபெறும் என்பது பொறுத்திருந்து பார்க்கலாம்.

ஆயினும் வழக்கைத் தாக்கல் செய்த மருத்துவர் சிவமோகனை கட்சியிலிருந்து இடைநிறுத்தும் முடிவு கடந்து 28ஆம் திகதி நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு எதிராக சிவமோகன் புதிய வழக்கு எதை தாக்கல் செய்வாரா என்பதையும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

இதே சமயம் மாவை சேனாதிராஜாவைத் தலைமை பொறுப்பிலிருந்து வெளியேற்றியமை உட்பட பல விடயங்களை ஒட்டி – முக்கியமாகத் தமிழரசு கட்சியின் மத்திய குழுவின் அதிகாரங்கள் பற்றிய விவகாரங்கள் சம்பந்தமாக – புதிய வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான முயற்சியில் மாவை தரப்பு அணியினர் சட்ட வட்டாரங்களுடன் ஓடித் திரிகின்றனர் எனத் தகவல்கள் கசிகின்றன. மலிந்தால் விடயம் சந்தைக்கு – சந்திக்கு – வரும். அப்போது பார்க்கலாம்.

---

## குற்றவாளிகள் சுதந்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த ஆட்சியில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள், மக்களை வதைத்தவர்கள் மற்றும் மக்களைப் படுகொலை செய்தவர்கள் அரசியலில் இருந்து மக்களால் ஒதுக்கப்பட்டாலும் அவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக அநுர அரசு ஏன் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை.?

வாக்குமூலம் என்ற பெயரில் ஒருசிலர் மாத்திரம் விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களும் வெளியில் வந்து வீரவசனம் பேசிக்கொண்டு திரிகின்றார்கள்.

ஊழல், மோசடிக்கு முற்றுப்புள்ளிவைப்போம், மோசடியாளர்களையும், கொலையாளிகளையும் சிறையில் அடைப்போம் என்று தேர்தல் காலங்களில் மக்கள் முன்னிலையில் பிரசாரம் செய்து ஆட்சிக்கு வந்த அநுர தரப்பினர், குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன்? அவர்கள் வழங்கிய உறுதிமொழிகளை விரைவாக நிறைவேற்ற வேண்டும்."

– என்றார்.

---

## குற்றவாளிகள் எவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குற்றமிழைத்தவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன்.?" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"குற்றவாளிகள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். எனவே, அவசரப்பட வேண்டாம், சட்டம் தன் கடமையைச் செய்யும். குற்றவாளிகள் எவரையும் இந்த அரசு பாதுகாக்காது. அவர்கள் தப்பித்து ஓடவும் முடியாது. குற்றங்கள் இழைத்தவர்கள் தண்டனைகளை அனுபவித்தே ஆக வேண்டும். இதில் அரசியல் தலையீடு இருக்க முடியாது." – என்றார்.

---

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட வேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அரசு, புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு தனது பதவிக் காலம் முடிவடையும் வரை காத்திருக்காமல் புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நேற்று சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே பேராயர் இதனைத் தெரிவித்துள்ளார்.

---

## இன்று கூடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...;)

சில விடயங்கள் தொடர்பில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை சபை அமர்வுகள் இடம்பெறவுள்ளன.


இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் துறைசார் அமைச்சரால் முன்வைக்கப்படவுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் மற்றும் சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ள விஜயம் என்பன பற்றியும் எதிரணிகள் கேள்விகளை எழுப்பவுள்ளன.

இன்று மத்திய வங்கி நிதி நிலை அறிக்கை தொடர்பிலும் விவாதிக்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை ஒதுக்கீட்டுச் சட்டமூலம் முன்வைக்கப்படவுள்ளது.

அரிசி தட்டுப்பாடு, சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு உள்ளிட்ட விடயங்களால் அரசு மீது எதிரணிகள் சரமாரியாக விமர்சனக்கணைகளைத் தொடுத்து வருவதால் அரசியல் பரபரப்புக்கு மத்தியிலேயே சபையும் கூடுகின்றது.







# அரச கரும மொழிகள் ஆணைக்குழுவிற்கு புதிய தலைவர், உறுப்பினர்கள் நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நிமல் ஆர். ரணவக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஏனைய உறுப்பினர்களாக பேராசிரியர் ஆர். எம். டபிள்யூ. ராஜபக்ஷ, பேராசிரியர் ஜோசப் யோகராஜா மற்றும் லரீனா அப்துல் ஹக் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் வழங்கி வைக்கப்பட்டன.





# வெற்றுக் கடவுச்சீட்டுக்கான கொள்வனவு கட்டளையை முன்வைக்க நடவடிக்கை

## அமைச்சர் விஜித ஹேரத் தகவல்




வெற்றுக் கடவுச்சீட்டுக்கான கொள்வனவு கட்டளையை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இலத்திரனியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையர்களுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் 7,50,000க்கும் அதிகமான கடவுச்சீட்டுக்கு மேலதிகமாக புதிய கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும்.

கடவுச்சீட்டுகளை விநியோகிப்பதில் தற்போது சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு அச்சிடும் பணிகள் புதிய நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டதை அடுத்து இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

கொள்கை ரீதியாகக் கடந்த அரசாங்கம் முன்னர் மேற்கொண்ட தவறான தீர்மானமே இந்த நெருக்கடி நிலைக்குக் காரணம்.

கடவுச்சீட்டுக்கான முன்பதிவுகளை மேற்கொண்டு சிலர் ஐந்து முதல் ஆறு மாதங்களாகக் காத்திருக்கின்றனர்.

இதன்காரணமாக கடவுச்சீட்டுக்களை அச்சிடுவதற்கான பொறுப்பை புதிய நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதற்கான விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன.”– என்றார்.






# தம்பட்டைப் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் சட்டத்தரணி படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

(வடிவேல் டினேஸ்)

திருக்கோவில் தம்பட்டை பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற விபத்தில் அக்கரைப்பற்று சட்டத்தரணிகள் சங்கத்தில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட சட்டத்தரணி சற்குணம் சசிராஜ் படுகாயமடைந்தார். அவர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருக்கோவில் பகுதியில் இருந்த தேங்காய் ஏற்றி வந்த வாகனமும் அக்கரைப்பற்று பகுதியில் இருந்து தம்பிலுவில் பகுதியை நோக்கி சென்ற சிரேஷ்ட சட்டத்தரணியின் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸ் நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# 1990 சுவசரிய மன்றத்தின் புதிய தலைவர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் நியமனம்






1990 சுவசரிய மன்றத்திற்கு புதிய தலைவர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கநேற்று வழங்கி வைத்தார்.

அதன்படி, 1990 சுவசரிய மன்றத்தின் புதிய தலைவராக ஏ.எம்.என். ரத்நாயக்க மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஆர்.ஜே.எம்.ஏ.பீ.சம்பத் மற்றும் நளீன் பெரேரா ஆகியோர் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் பேய்முகம்?

புதிய அரசு - தரப்பு - ஆட்சிக்கு வந்துள்ளது. 'புதுத் தும்புக்கட்டை நன்றாகக் கூட்டும்' என்று எதிர்பார்த்தால், 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதையாக முன்னைய அரசுகளின் பாணியிலேயே தமிழர் பிரச்சினையை - பிரதேசங்களை - கையாள முனைகின்றது புதிய ஆட்சிப் பீடமும்.

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இருந்து, பின்னர் அகற்றப்பட்ட சோதனைச் சாவடிகள் மீண்டும் முளைக்கின்றமை - திடீரென அமைக்கப்பட்டு வருகின்றமை - பொது மக்கள் மத்தியில் சந்தேகத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

போரின் போதும், போர் முடிவுற்ற பின்னரும் கூட பல்வேறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தச் சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்திருந்தனர். இந்நிலையில் நாட்டில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற பின்னர் இங்கு இருந்த சோதனைச் சாவடிகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட்டன.

எனினும், அந்தச் சோதனைச் சாவடிகள் தற்போது மீண்டும் அதே இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றமை தமிழ் மக்கள் மனதில் பல சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத் தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மாற்றம் என்று கூறி புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசு, சோதனைச் சாவடிகளைத் தாமே அகற்றுவதும் மீண்டும் தாமே அமைப்பதுமான இந்த நடவடிக்கை தொடர்பில் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை, நீண்ட காலமாகப் பருத்தித்துறையில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமை அகற்றுவதாக அநுர அரசு உறுதியளித்திருந்த போதிலும் இது வரையில் அது அகற்றப்படாமலே இருக்கின்றது.

*1983* ஜூலைக் கலவரத்துக்கு முன்னர் வடக்கில் சிங்களவர்கள் வசித்த எண்ணிகைகள் பற்றிய விடயங்களை புதிய ஆட்சிப் பீடம் துருவித் துருவி விசாரித்துத் தேடி எடுத்துப் பெற்றிருக்கின்றது.

மீண்டும் வடக்கில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கான முன்னாயத்த ஏற்பாடு நடப்பதாக இந்த விவகாரத்தை ஒட்டி கொழும்பு ஊடகம் ஒன்று அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தது.

இந்தப்பின்புலத்திலேயேயாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இருந்து, பின்னர் அகற்றப்பட்ட சோதனைச் சாவடிகள் மீண்டும் முளைக்கின்றமை பற்றிய செய்திகள் வெளிவருகின்றன.

இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது இயல்பாகவே வடக்குத் தமிழர்கள் மத்தியில் பீதியுணர்வு வெளிக் கிளம்புவது தவிர்க்க முடியாததே.

அநுரகுமார திஸநாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வைத் தரும் என்று பொதுத் தேர்தல் சமயத்தில் தமிழ் மக்கள் மத்தியில் அக்கட்சிக்குக் குஞ்சரம் கட்டிக் கொண்டு திரிந்த வடக்கு புத்திஜீவிப் பிரமுகர்கள் கூட்டம்தான் தமிழ் மக்கள் மத்தியில் தற்போது உருவாகி வரும் அச்சவுணர்வுக்கு முதலில் சரியான பதிலை - பிரதிபலிப்பை - காட்ட வேண்டும்.



# கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் புதுவருட அன்பளிப்பும் ரீசேட் அறிமுகமும்

(அபு அலா)

புதுவருடத்தை முன்னிட்டுக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைச்சின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு புதுவருட அன்பளிப்புடன் அமைச்சின் சின்னம் பொறிக்கப்பட்ட ரீ சேட் வழங்கி வைக்கும் நிகழ்வு அன்மையில் சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எல்.பி.மதநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளிட்ட அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சுகாதார அமைச்சின் செயலாளர் எல்.பி.மதநாயக்கவால் புதுவருட அன்பளிப்பும் அமைச்சின் சின்னம் பொறிக்கப்பட்ட ரீ சேட்டும் வழங்கப்பட்டன.



### கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்கு

# மோ. சைக்கிளில் கஞ்சா கடத்திய பெண் உட்பட இருவர் சிக்கினார்கள்

(கி.வசந்தன்)

கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்கு மோட்டர் சைக்கிளில் கஞ்சா கடத்தியதாகப் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்கு வருகை தந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருந்து 700 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அதில் பயணித்த 36 வயதுடைய பெண் ஒருவரும், அவரது சகோதரர் எனக் கூறப்படும் 30 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து இரண்டு இலட்சத்து 72 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஓமந்தைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.







# கொழும்பு பங்குச் சந்தையின் விலைச் சுட்டெண் சரிவு!

கொழும்பு பங்குச் சந்தையின் விலைச்சுட்டெண் நேற்று சரிவைச் சந்தித்துள்ளது.

அதனடிப்படையில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 170.82 புள்ளிகளால் சரிவடைந்தது.

அந்தவகையில், கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 15,878.60 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. கடந்த வாரம் இந்த விலைச் சுட்டெண்ணானது 6,000 புள்ளிகளுக்கு மேல் அதிகரித்திருந்தது.

# தேநீர் விருந்து தொடர்பில் நாடாளுமன்றம் விளக்கம்



நாடாளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்தின் உண்மையான செலவு என்ற தலைப்பில் கடந்த டிசம்பர் 29ஆம் திகதி பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி தொடர்பில் நாடாளுமன்றம் விளக்கமளித்துள்ளது

நாடாளுமன்ற செலவுத் தலைப்பின் கீழ் சம்பிரதாயமாக நடத்தப்படும் நிகழ்ச்சிகள் மற்றும் தேநீர் விருந்துபசாரத்திற்காக ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வில் 287,340 ரூபாயும், பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்துபசாரத்திற்கு 339,628.55 ரூபாயும் செலவு செய்யப்பட்டிருப்பதாக அந்த ஊடக செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பம் 2020.08.20ஆம் திகதியும், பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பம் 2024.11.21ஆம் திகதியும் நடைபெற்றன.

இதற்கு அமைய ஒன்பதாவது நாடாளுமன்றம் மற்றும் பத்தாவது நாடாளுமன்றத்தின் முதல்நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்துபசாரங்களுக்கான செலவுகள் சில காரணங்களினால் வேறுபடுவதாக நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது

ஒன்பதாவது மற்றும் பத்தாவது நாடாளுமன்றங்களின் முதல்நாள் அமர்வுகளுக்கிடையில் 4 வருட கால இடைவெளி காணப்படுவதாகவும் இக்கால இடைவெளியில் சந்தையில் ஏற்பட்ட விலை ஏற்ற இறக்கங்கள் விருந்துபசாரத்துக்கான செலவுகள் உள்ளிட்ட ஏனைய செலவினங்கள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணமாக அமைந்தது என நாடாளுமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவினால் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்தமையால் உணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்கான செலவுகள் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் அண்ணளவாக 100 வீதத்தால் அதிகரித்துள்ளன என்பதைத் தெரிவிக்க விரும்புவதாகவும் நாடாளுமன்றம் கூறுகிறது

மேலும், இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமன்றி, இராஜதந்திரிகள், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள், அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மற்றும் நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதாகவும் நாடாளுமன்றம் குறிப்பிட்டுள்ளது.



# சர்ச்சைக்குரிய வழக்குகள் குறித்து ஜனாதிபதி சட்ட மா அதிபருடன் நேற்று கலந்துரையாடல்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் சட்ட மா அதிபர் உள்ளிட்ட சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சட்டத்தை அமுல்படுத்துவதற்காக செயற்படும் அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார்.

நீதித்துறை கட்டமைப்பின் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவது சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பாகும் எனவும், அரசியல் அதிகாரத்தின் மீதான மக்களின் அபிப்பிராயங்களை மாற்றி நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனவும் மக்களின் எதிர்பார்ப்புகள் வீழ்ச்சியடைய ஒருபோதும் இடமளிக்கக் கூடாது எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இங்கு மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு மக்களின் எதிர்பார்ப்புகளை வீழ்ச்சியடையச் செய்யும் வகையில் அரசாங்கம் செயற்படாது என்றும், சட்டத்தை நிலைநாட்டுவது தொடர்பில் மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதோடு அதனை மீளமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பில் நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, சட்ட மா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க மற்றும் சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.






# ஒப்பனை கலைஞர்களுக்கான தேசிய போட்டி கொழும்பில்

"மேக்கப் ஆர்ட்டிஸ்ட் கிளப் ஒப் லங்கா ஏற்பாட்டில்" எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22 திகதி ஒப்பனை கலைஞர்களுக்கான தேசிய போட்டி கொழும்பில் நடைபெறவுள்ளதாக அதன் ஸ்தாபகரும் தலைவருமான அனு குமரேசன் தெரிவித்தார்.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பு 6 – வெள்ளவத்தையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அனு குமரேசன்,

"கடந்த வருடம் இலங்கையின் 17 மாவட்டங்களில் இருந்தும் போட்டியாளர்கள் பங்கு பெற்றிருந்தார்கள். இதில் பலர் வெற்றிவாகை சூடியிருந்தார்கள். அத்துடன் இந்த போட்டி நிகழ்ச்சியின் மூலமாக போட்டியாளர்களுக்கு துறைசார் நிபுணர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் திறனாய்வினூடாக கேடயங்கள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கப்படுவதோடு பணப்பரிசுகளையோ அல்லது வேறெந்த கவர்ச்சிகரமான பரிசுகளையோ காட்சிப்படுத்தாமல் முழுவதுமாக அவர்களின் திறமைகளையும் எதிர்கால நலனையும் கருத்தில் கொண்டு, போட்டியாளர்களின் திறமைகளுக்கு ஒரு களமாகவும் நடாத்தப்படும் ஒரு தேசிய போட்டி நிகழ்வாகும்."– என்றார்.

மேலும் இந்நிகழ்வில் அமைப்பின் ஸ்தாபகரும், தலைவருமான அனு குமரேசனுடன் செயலாளர் வித்தியா நிரஞ்சன் மற்றும் பொருளாளர் சிதம்பரம் அஜித் ஆகியோர்களும் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்ததுடன், அமைப்பின் நிர்வாக குழுவினர் மற்றும் கடந்தமுறை வெற்றியாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை இலங்கையின் பல பாகங்களைச் சேர்ந்த அழகுக்கலை நிபுணர்கள் "மேக்கப் ஆர்ட்டிஸ்ட் கிளப் ஒப் லங்காவினூடாக" கடந்த காலங்களில் சர்வதேச ரீதியாக அழகுக்கலை போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளனர்.

இதன் தலைவரான அனு குமரேசன் அண்மையில் "ஏசியன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்" இல் அதிக ஒப்பனைக் கலைஞர்களை ஒன்று திரட்டி மிகக் குறுகிய நேரத்தில் கண் அலங்காரம் செய்து உலக சாதனைப் படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







# மனுஷ நாணயக்காரவின் சகோதரரின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு



முன்னாள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக் காரவின் சகோதரரான திசர நாணயக் காரவை எதிர்வரும் 17ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கம்பஹா நீதவான் சிலனி பெரேரா வினால் இந்த உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

பின்லாந்தில் தொழில்வாய்ப்பை பெற்றுத்தருவதாகக் கூறி 30 லட்சம் ரூபாவை மோசடி செய்தமை தொடர் பில் திசர நாணாயக்கார என்பவர் பிபிலையில் வைத்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் இந்த நடவடிக் கைக்கு வேறு எவரேனும் உதவி புரிந் துள்ளார்களா என்பது தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் திசர நாணாயக் கார நீதிமன்றத்தில் நேற்று முன்னி லைப்படுத்தப்படவில்லை.

## ஓமானில் உயிரிழந்த இலங்கை யுவதி:

# தொழிலுக்காக அனுப்பிய 3 சந்தேகநபர்கள் கைது

பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு ஓமானில் உயிரிழந்த இலங்கை யுவதியொருவரை தொழி லுக்காக அனுப்பிய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை-சூச்சிகிராமத்தைச் சேர்ந்த 22 வயதான இளம் யுவதி ஒரு வரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பணியகம் குறிப்பிட்டுள்ளது.

மேற்படி யுவதிக்கும் அவரது மூத்த சகோதரிக்கும் டுபாயில் தாதியர் சேவை யில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி அவர்களை ஓமானில் வீட்டு வேலைக்கு அனுப்புவதற்கு சந்தேகநபர்கள் செயற்பட்டுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித் துள்ளது.

சுற்றுலா விசாவில் வெளிநாடு சென்ற மையினால் தொழிலின்றி ஓமானின் பல்வேறு இடங்களிலும் அந்த யுவதி கள் இருவரும் தொழிலில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் பல்வேறு துன் புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட தமது தங்கை கடந்த 22ஆம் திகதி உயிரிழந்துள்ளார் என மூத்த சகோ தரி தனது தாய்க்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய அந்த யுவதியையும் அவரது மூத்த சகோதரியையும் ஏமாற்றி வெளிநாட்டுக்கு அனுப்பிய அம்பாந் தோட்டை பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கூறியுள்ளது.

சந்தேகநபர்கள் அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்ட பின்னர் அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதாகவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# சிறைச்சாலை அதிகாரி பதவிக்கு 1,800 வெற்றிடங்கள் உள்ளன




சிறைச்சாலை அதிகாரி பதவிக்கு 1800 வெற்றிடங்கள் காணப்படு கின்றன என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் சோதனை நடவடிக் கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், கைதிகளைச் சோதனைக்குட்படுத்துவதற்காக தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள யோசனை முன்வைக்கப் பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி திசாநாயக்க தெரிவித் துள்ளார்.

தற்போது நாட்டிலுள்ள சிறைச்சாலை களில் கைதிகளின் சாதாரண எண் ணிக்கை 300 வீதமாக அதிகரித் துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.




# கருக்கலைப்பு மாத்திரைகளை விற்றவர் நுவரெலியாவில் கைது

நுவரெலியாவில் கருக்கலைப்பு மாத்திரைகளை விற்பனை செய்த மருந்தகத்தின் உரிமையாளர் நுவரெலியா பிரிவு ஊழல் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் மற்றும் நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரினால் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

சட்ட விரோத கருக்கலைப்பு மாத்திரையை 15,000 ரூபாய்க்கு மருந்தக உரிமையாளர் விற்பனை செய்கிறார் எனப் பிரதேச ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடவடிகை எடுக்கப்பட்டதாக இலஞ்ச ஒழிப்பு பிரிவின் நிலைய அதிகாரி மேனன் தெரிவித்தார். நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரியுடன் இணைந்து சந்தேக நபரைக் கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேக நபரின் மருந்தகத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஏராளமான கருக்கலைப்பு மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் எனவும், சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட இந்தக் கருக்கலைப்பு மாத்திரைகளை விற்பனை செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.




# ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் சம்மாந்துறையில் பெண் ஒருவர் சிக்கினார்

(தில்சாத் பர்வீஸ்)

ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் நகை மீட்கச்சென்ற சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அந்த ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாளையும் சம்மாந்துறைப் பொலிஸார் கைப்பற்றி உள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை அம்பாறை பிரதான வீதியில் அமைந்துள்ள ஏசியா எஸட் பினான்ஸ் பீ.எல்.சீ. வங்கியில் போலி நாணயத்தாளுடன் நகையை மீட்கச்சென்றவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸாருக்கு வங்கியில் இருந்து கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே மேற்படி நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டனர்.

குறித்த வங்கியில் நகையை மீட்பதற்கு நாணயத்தாள்களை பரிசோதனை செய்த போது போலி நாணயத்தாள் இருப்பது தெரியவந்துள்ளது.

புளக் ஜே மேற்கு 01 பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேக நபரே ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

# மன்னார் – வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட பஸ்ரியன் அடிகளின் 40ஆம் ஆண்டு நினைவு தினம்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் – வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 40 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை காலை வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது சிலைக்கு மாலை அணிவிக்க பட்டு சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து குருக்கள் மற்றும் கிராம மக்கள் சுடர் ஏற்றி மலர் தூவி, படு கொலை செய்யப்பட்ட அருட்தந்தை மற்றும் மக்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தும், உயிரிழந்த மக்களின் உடல்களை மீட்டு அடக்கம் செய்யவும், பல்வேறு மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வந்த மன்னார் வங்காலை புனித ஆனாள் ஆலய பங்குத்தந்தை அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டார்.

மேலும் அவருடன் பொது மக்களும் படுகொலை செய்யப்பட்டனர். திருப்பலியின் போது அருட்தந்தையுடன் சேர்ந்து இன்னுயிர் நீத்த உறவுகளுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் அவருடன் சேர்ந்து உயிர் நீத்தவர்களின் 40 வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இரத்ததான நிகழ்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# அண்ணா பல்கலைக்கழக சம்பவத்தை கண்டித்து சட்டப்பேரவையிலிருந்து பா.ம.க. வெளிநடப்பு



அண்ணா பல்கலை. துஷ்பிரயோக சம்பவத்தைக் கண்டித்து பா.ம.கவினர் சட்டப்பேரவையில் இருந்து நேற்று வெளியேறினர்.

சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்த பின்னர், பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவிக்கு நடந்த வன்கொடுமைக்கு தமிழக அரசு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. அதை கண்டித்து அரசியல் கட்சிகள் ஜனநாயக ரீதியாக போராடுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அதற்கு அனுமதி அரசு வழங்க மறுக்கிறது. பேசுவதற்கும் வாய்ப்பு அளிக்கவில்லை, போராடுவதற்கும் அனுமதி இல்லை. இப்படி அனுமதி மறுக்கப்பட்டு போராடியவர்களை கைது செய்து வழக்கு பதிவு செய்து மண்டபத்தில் பிடித்து வைக்கின்ற கொடிய சம்பவத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

இதையொட்டி பா.ம.க. வெளிநடப்பு செய்திருக்கிறோம். அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி எந்த அமைப்பாக இருந்தாலும் சரி ஜனநாயகத்திற்கு போராடுவதற்கு உரிமை இருக்கிறது. அதுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று பொதுவுடமைக் கட்சிகள் கூட அவற்றை சொல்கின்றனர். தி.மு.க கூட்டணி கட்சியில் இருக்க கூடிய வர்களே இதை சொல்கிறார்கள். “ – என்றார்.



# சட்டமன்ற நிகழ்ச்சிகள் முழுமையாக நேரலையில் ஒளிபரப்பப்பட வேண்டும்

## தமிழக அரசுக்கு விஜய் வலியுறுத்தல்


சட்டமன்ற நிகழ்ச்சிகள் முழுவதையும் எந்தவித இடையூறும் இல்லாமல் நேரலையில் ஒளிபரப்ப வேண்டும் என்று தமிழக அரசை தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“தமிழ்த்தாய் வாழ்த்து முதலிலும், தேசிய கீதம் இறுதியிலும் பாடப்படுவது தமிழகச் சட்டமன்றத்தின் ஆண்டாண்டு கால மரபு. பொன்விழா கண்ட தமிழகச் சட்டமன்றத்தின் மரபு எந்நாளும் காக்கப்பட வேண்டும். ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் ஆளுநர் யாராக இருந்தாலும் தமிழகச் சட்டமன்ற மரபைக் காக்கும் நடவடிக்கைகளைப் பின்பற்றியே ஆக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

ஒவ்வொரு முறை சட்டமன்றம் கூடும் பொழுதும், மரபு சார்ந்த செயல்பாடுகளில் ஆளுநருக்கும் அரசுக்கும் இடையே மோதல் போக்கு உருவாவது தொடர்கதையாகி வருகிறது. இது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல, இந்தப் போக்கு கைவிடப்பட வேண்டும். மக்கள் பிரச்சினைகள் குறித்தான விவாதங்களே இடம்பெற வேண்டும். ஆண்டின் முதல் சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்கியுள்ள நிலையில், அதன் நிகழ்வுகளை உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் நேரலை ஒளிபரப்பை நிறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சட்டமன்றத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையே ஜனநாயக முறையில் நடைபெறும் விவாதங்களை, வெளிப்படையாகத் தமிழக மக்கள் தெரிந்துகொள்வது அவசியமாகும். எனவே, சட்டமன்ற நிகழ்ச்சிகள் முழுவதையுமே எந்த வித இடையூறும் இல்லாமல் நேரலையில் ஒளிபரப்ப வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# சத்தீஸ்கரில் பாதுகாப்பு பணியாளர்களின் வாகனம் மீது தாக்குதல்; 9 பேர் பலி

சத்தீஸ்கர் மாநிலம், பிஜப்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் பணியாளர்கள் சென்ற வாகனத்தை நக்சலைட் பிரிவினைவாதிகள் குண்டுத்தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் 8 மாவட்ட ரிசர்வ் காவலர்களும் (DRG), சாரதியும் உயிரிழந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (DRG என்பது மாநில காவல்துறையின் ஒரு பிரிவு)

பாதுகாப்புப் பணியாளர்கள் தண்டேவாடா, நாராயண்பூர் மற்றும் பிஜாப்பூர் ஆகிய பகுதிகளின் கூட்டு நடவடிக்கையிலிருந்து முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது நேற்று திங்கள் கிழமை பிற்பகல் 02.15 மணியளவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அடையாளம் தெரியாத நக்சலைட்டுகள் பிஜப்பூர் மாவட்டத்தின் குத்ரு பொலிஸ் நிலையப் பகுதியில் உள்ள அம்பேலி கிராமத்தின் அருகே பாதுகாப்பு பணியாளர்கள் பயணித்த வாகனத்தை வெடிக்கச் செய்தனர் என பொலிஸார் கூறியுள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பாதுகாப்புப் படையினர் மீது நக்சலைட்டுகள் நடத்திய மிகப்பெரிய தாக்குதல் இது வாகும் என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2023 ஏப்ரல் 26 அன்று, தண்டேவாடா பகுதியில் பாதுகாப்புப் பணியாளர்களை ஏற்றிச் சென்ற வாகனத் தொடரணியின் ஒரு பகுதியாக இருந்த நக்சல்கள் தங்கள் வாகனத்தை வெடிக்கச் செய்ததில் பத்து பொலிஸாரும் ஒரு சிவிலியன் சாரதியும் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# முகக் கவசம் அணியுமாறு கர்நாடகாவில் அறிவுறுத்தல்!

சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் தற்போது சீனாவில் புதிய வைரஸ் ஒன்று பரவி வருகிறது.

எச்.எம்.பி.வி என அழைக்கப்படும் இந்த வைரசால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனாவை போன்றே இந்த வைரசால் காய்ச்சல், இருமல், சளி, தொண்டை வலி உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இந்நிலையில் இந்தியாவில் முதல் மனித மெட்டாப்நியூமோவைரஸ் (HMPV) வைரஸ் தொற்று பாதிப்பு கர்நாடகாவில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், கர்நாடகாவில் கூட்டமான இடங்களுக்கு செல்லும் மக்கள் கர்நாடகாவில் முககவசம் அணியுமாறு அம்மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.



# இடைநிலை தூர ஏவுகணையை சோதனை செய்தது வடகொரியா

வடகொரியா, அதன் கிழக்கு கடற் பிராந்தியத்தை நோக்கி இடைநிலை தூர ஏவுகணை ஒன்றை இரண்டு மாதங்களின் பின்னர் நேற்று ஏவியுள்ளது.

எனினும் அந்த ஏவுகணை ஜப்பானிய நேரப்படி நேற்று மதியம் கடலில் வீழ்ந்துள்ளதாக ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி ப்ளிங்கன் தென்கொரியாவுக்கு சென்றுள்ள நிலையில், இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டுள்ளது.

நேற்று காலை, தென்கொரியாவின் பதில் ஜனாதிபதி சோய் சாங் மோக்கை சந்தித்து, அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி ப்ளிங்கன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, அவர் அமெரிக்காவுக்கும் தென்கொரியாவுக்குமான இருதரப்பு உறவுகள், கொரிய தீபகற்பத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இந்தநிலையில், வடகொரியா தற்போது ஏவுகணை சோதனைகளை பலப்படுத்தியுள்ளதாகவும், நேற்றைய ஏவுகணை சோதனை தொடர்பான மேலதிக தகவல்களை அமெரிக்காவுடனும் ஜப்பானுடனும் பகிர்ந்து கொள்ளவுள்ளதாக தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த மாதம் தென்கொரியாவின் பதவிநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் யோல் நடைமுறைப்படுத்திய அவசரகால இராணுவச் சட்டத்திற்கு பின்னர் பல வாரங்களாக நாட்டை சர்ச்சைக்குள்ளாகிய அரசியல் சூழ்நிலைகளுக்கு மத்தியில் மேற்படி ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இரண்டாவது பிடியாணை



பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இரண்டாவது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஷேக் ஹசீனாவின் ஆட்சியின் போது மர்மமான முறையில் காணாமல் போனவர்கள் தொடர்பான வழக்கில் ஷேக் ஹசீனா, அவரது இராணுவ ஆலோசகர், இராணுவ அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகள் என மொத்தம் 12 பேரை கைது செய்ய உள்நாட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளதாக அந்தநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஷேக் ஹசீனாவின் ஆட்சியின் போது 500 இற்கும் மேற்பட்டோர் பங்களாதேஷ் பாதுகாப்பு படையினரால் கடத்தப்பட்டனர் என கூறப்படுகிறது.

சிலர் பல ஆண்டுகளாக இரகசிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டனர் என கூறப்படுகிறது.

ஷேக் ஹசீனா நாட்டைவிட்டு வெளியேறிய பின், பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடளித்து வருகின்றனர்.

இதனிடையே ஷேக் ஹசீனாவை நாடு கடத்தி, பங்களாதேஷிற்கு கொண்டு வரும் நடவடிக்கையை முகம்மது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.



# அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு; 7 மாநிலங்களில் அவசரகால நிலை



அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள அதிக பனிப் பொழிவுடனான கடும் குளிர் காலநிலை மேலும் பல மாநிலங்களைத் தாக்கியுள்ளது.

பெரும்பாதிப்பிற்கு உள்ளான 30 மாநிலங்களில் சிலவற்றில் கடுமையான காற்று மற்றும் இடியுடனான கடும் மழை பெய்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு மாநிலங்களில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. துருவத்தில் சுழலினால் ஏற்பட்ட புயல் மத்திய அமெரிக்காவின் பெரும் பகுதியைத் தாக்கியுள்ளது.

ஒரு அடி உயரத்திற்கும் மேலாகப் பனி பொழிந்துள்ளது. இதன் காரணமாக 6 கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அதிக அளவிலான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன், பல பெருந்தெருக்கள் சேதமடைந்ததனை அடுத்து போக்குவரத்துக்கள் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில், தற்போது மத்திய அமெரிக்காவில், மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

பொதுமக்களை வீட்டிலேயே பாதுகாப்பாக இருக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

அதேவேளை, அமெரிக்காவின் கிழக்கு கரைநோக்கி புயல் நகரும் பட்சத்தில் காலநிலையில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம் எனக் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 07.01.2025




இன்று நீங்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது சிறந்தது. அதன் மூலம் இன்றைய நாள் சீராகச் செல்லும்.

இன்று பணியில் முன்னேற்ற கரமான நிலை இருக்காது. உங்கள் பணிகளை கவனச் சிதறலின்றி கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையை இன்று புரிந்துகொள்வது கடினமாக இருக்கும். வாக்குவாதமும் கருத்து வேறுபாடும் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று வீணான செலவுகள் செய்ய நேரும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று பதட்ட நிலை உங்களை பாதிக்கும். அமைதியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று உங்களிடம் நம்பிக்கை காணப்படும்.

இன்று நீங்கள் அறிவு பூர்வமாகத் திட்டமிட்டு உறுதியாக பணியாற்றினால் கடினமான பணிகளையும் இன்று எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடனான உறவில் அன்பு பெருகும். இது இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட உதவும்.

பங்கு வர்த்தகம் மூலம் கூடுதல் பண வரவு காணப்படும். இன்றைய நாளை நீங்கள் அதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். அதன் மூலம் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அமைதியான மன நிலை காணப்படும். உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்துகொள்ள முடியும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் பணிகள் சுமூகமாக நடைபெறும் உங்கள் தனித்த திறமை மூலமாக உங்களுள் ஒளிந்திருக்கும் ஆற்றல் வெளிப்படும்.

உங்கள் துணை உங்களிடம் அன்பான, நட்பான அணுகுமுறை மேற்கொள்வார். இதனால் நல்ல புரிந்துணர்வை உங்களால் பராமரிக்க முடியும்.

பணியிடத்தில் உங்கள் கடின உழைப்பு காரணமாக கூடுதல் ஊக்கத்தொகை மூலம் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக இன்று நீங்கள் நல்ல உடல் நிலையை பராமரிப்பீர்கள்.




இன்று பல தடைகளை சந்திக்க நேரும். குழப்பமான மன நிலை காரணமாக பதட்டம் காணப்படும். பொதுவாக இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். கடினமான நாள்.

இன்று நீங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது அசௌகரியமாக உணர்வீர்கள். அதிகரிக்கும் பணிகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவதை தவிர்க்கவும். அகந்தைப் போக்கு உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதி விஷயத்தில் இன்று சில கஷ்டங்களை சந்திக்க நேரும். அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தையும் கவலையையும் அளிக்கும்.

இன்று உங்களுக்கு தோள்களில் வலி ஏற்படலாம். சளி மற்றும் இருமல் பிரச்சினைக்கான வாய்ப்பு உள்ளது.




உங்கள் இலக்குகளை அடைவதில் சில தடைகளை சந்திக்க நேரும். அதிகமாக சிந்திக்காதீர்கள். உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் பொழுது அசௌகரியமாக உணர்வீர்கள். கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். எனவே குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க திட்டமிட்டு ஒழுங்கமைத்து பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் மோதல்கள் காணப்படும். மாறுபடும் சூழல்களை ஏற்றுக் கொண்டு அமைதியாகச் செயற்பட வேண்டும்.

உங்களின் சம்பாத்தியம் மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகு வலி பாதிப்பு காணப்படும். உடற்பயிற்சி மற்றும் தியானம் மிகவும் உதவிகரமாக இருக்கும்.




இன்று அமைதியான நாள். வசதிகள் பெருகும் நாள். உங்களிடம் திருப்தியான மனநிலை காணப்படும். நீங்கள் பெரிதாக சாதித்தது போன்று உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்வீர்கள். உங்கள் பணி செய்யும் முறை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் இருப்பதை சொர்க்கத்தில் இருப்பது போல உணர்வீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று சேமிப்பை ஏற்படுத்திக் கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். நிதிநிலைமை சுதந்திரமாக இருக்கும்.

உங்கள் மனதில் நம்பிக்கை தரும் எண்ணங்களும் மகிழ்ச்சியும் காணப்படும்.




இன்று பதட்டம் காணப்படும். அமைதியாக இருப்பதன் மூலம் நல்ல முடிவுகளை எடுக்கலாம். பிரார்த்தனை மற்றும் வழிபாடு உதவிகரமாக இருக்கும்.

இன்று பணியில் பல சவால்களை சந்திக்க நேரும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு அதன்படி மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கலாம்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் பொறுப்புகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பதட்டம் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை உங்களுக்கு ஆறுதல் தரும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். இன்று மகிழ்சிகரமான விஷயங்களையும் எதிர்பார்க்காதீர்கள். இன்று அதிகம் எதிர்பார்க்காதீர்கள்.

பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். பணிகளை திட்டமிட்டு அதன்படி மேற்கொள்ள வேண்டும்.

உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிக்கப்படும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் வீட்டு பெரியவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.

தேவையற்ற உணர்வுகள் காரணமாக ஆரோக்கியம் குறையும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.01.2025




இன்று சுமாரான பலன்களே கிடைக்கும்.இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவு அதிகமாக இருக்கும். உங்கள் மனதில் குழப்பம் காணப்படும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். முறையாக திட்டமிட்டால் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் முடிக்க இயலும்.

உங்கள் துணையுடன் உரையாடும் போது சகஜமாக இருக்க வேண்டும். இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதிநிலைமையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிடுங்கள்.

மிகவும் வருத்திக் கொள்வதன் மூலம் கண்களில் எரிச்சல் ஏற்படலாம். எனவே இதனை தவிர்க்க உற்சாகத்துடன் இருப்பது சிறந்தது.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். நீங்கள் இன்று விரைந்து முடிவெடுக்கக் கூடிய நல்ல மனநிலையில் இருப்பீர்கள். இன்று மொத்தத்தில் சிறப்பான நாள்.

நீங்கள் பணிகளை விரைவாக மேற்கொள்வீர்கள்.நம்பிக்கை மற்றும் உறுதி கொண்டு உங்கள் போராட்டங்களை சமாளிக்கலாம். இதன் மூலம் நீங்கள் வெற்றி காணலாம்.

உங்கள் துணையிடம் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் அவர் உங்களை நன்கு புரிந்து கொள்வார். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம். உங்கள் நிதிநிலையை சிறப்பாக மேம்படுத்திக் கொள்வீர்கள்.




இன்று மிகவும் அனுகூலமான நாள். நம்பிக்கை உணர்வு அதிகரிக்கும். செழிப்பான நாள். இன்று அமைதியாக உணர்வீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமூட்டும் வாய்ப்புகள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நீங்கள் நகைச்சுவை உணர்வோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கான ஊக்கத் தொகை மூலம் அந்தப் பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் நம்பிக்கை காரணமாக நீங்கள் மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று சற்று மந்த நிலை காணப்படும். உங்கள் செயல்களை ஆற்றும் போது கவனம் தேவை. உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் நீங்கள் இன்று வெற்றி பெறலாம்.

பணியிடத்தில் வெற்றி அவ்வளவு எளிதாக கிடைக்காது. அதிகமான பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேரும்.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். இது உறவின் மகிழ்ச்சி நிலையைக் குறைக்கும்.

அதிகரிக்கும் குடும்பப் பொறுப்புகள் காரணமாக அதிக பணம் செலவாகும். இதனால் உங்கள் நிதி நிலை பாதிப்புக்குள்ளாகும்.

ஒவ்வாமை காரணமாக இன்று கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.



# 28 பில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் பறிமுதல்

கடந்த வருடத்தில் மாத்திரம் 28,158 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியான போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளை இலங்கை கடற்படை கைப்பற்றியுள்ளது.

கடற்படை, பொலிஸ், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் சுங்கத் திணைக்களம் உள்ளிட்ட கடல்சார் பாதுகாப்பு தரப்பினருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட சோதனைகளின் ஊடாக இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோதமாக பொருள்களை கொண்டுசெல்லுதல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரஜைகள் 407 பேர் கைது செய்யப்பட்டனர் என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இதனிடையே, கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலைத்திட்டத்திற்கு இணையாக இவ்வருடத்தில் இலங்கை கடற்படை தேசிய கடல்சார் அபிலாஷையை அடைவதற்கான புதிய மூலோபாயத் திட்டத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக விருப்பதாக இலங்கை கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.